## தலைப்பு 236 – அரசகரும மொழிகள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 236 – அரசகரும மொழிகள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் பொறுப்புக்கள் ரூபா 1,352,352 ஆக இருந்த போதிலும், திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் பொறுப்புக்கள் ரூபா 3,164,591 ஆனமையால் அதனிடையே ரூபா 1,812,239 வேறுபாடு காணப்பட்டது. | இந்த பொறுப்புக்களின் தொகை 2023 ஆம் ஆண்டில் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்து ஏற்பட்ட தாமத வழுக்கள் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மொரட்டுவை பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட கிரயம் ரூபா 10,810,000 ஆன சிங்களம், தமிழ் | மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த மென்பொருள் தற்போது இந்த | சிங்களம், தமிழ் மென்பொருளின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தலொ |

| | | | |
|---|---|---|---|
| | மென்பொருளின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தலொன்று அரசகரும மொழிகள் ஆணையாளர் நாயகத்தால் 2022 பெப்ரவரி 14 ஆம் திகதி செயற்திட்ட பணிப்பாளரிடம் இருந்து கோரப்பட்ட போதிலும் அது வழங்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திலும், ஏனைய அரச நிறுவனங்களிலும் பயன்பாட்டிற்காக இலங்கை அரச இணையதளத்தில் (LGN Cloud) இல் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மேலும், உரிய சேவர் இயந்திரத்தின் இயலளவு (8GB RAM and 4 VCPU) அதிகரித்து வழங்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருளுக்காக தேவையான துணைப் பெயரை பெறுதல் மற்றும் Public IP Address உடன் ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், மென்பொருளை பாவனையாளர்களுக்கு வழங்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன், இந்த மென்பொருள் செயற்படு நிலையில் காணப்படுகின்றது. | ன்றை பெற்று பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்படல் வேண்டும். |
| (ஆ) | அரச ஊழியர்கள் மற்றும் பகுதி அரச ஊழியர்களினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய வாய்மொழி மூல, எழுத்து மூல மற்றும் பேசும் மொழித் திறன் பாடநெறிக்காக 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,221,749 பெறுமதியான 37297 நூற்கள் விற்பனை செய்யப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டது. | அரசாங்க சேவை, மாகாண சபை மற்றும் உளளூராட்சி செயலாளரின் 2021.12.28 ஆம் திகதிய கடிதத்தின் படி இந்த புத்தகங்கள் அரசாங்க அலுவலகங்களுக்கோ அல்லது பாடசாலைகளுக்கோ இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்திகதியில் இருந்து இது வரை எங்களுக்கு கோரிக்கைகள் கிடைக்கின்ற பிரகாரம் 1,339 புத்தகங்கள் மாத்திரம் தற்போது இலவசமாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தேவைகளை இனங்கண்டு கொள்வனவு செய்தல் மூலம் அரசாங்கத்தின் பணத்தை சிக்கனமாக பயன்படுத்தாமை தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொறுப்பு கூறுதல் வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட நிலையின் பதவிகளில் 05 வெற்றிடங்கள், மூன்றாம் நிலையின் பதவிகளில் 35 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையின் பதவிகளில் 13 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையின் பதவிகளில் 03 வெற்றிடங்களும் ஆக 56 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அந்தந்த பதவிகளுக்காக அரச நிர்வாக அமைச்சுக்கு அறிவித்தமை, ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் திருத்தங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கும், சம்பள ஆணைக்குழுவிற்கும் அங்கீகாரத்திற்கு அனுப்பி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மொழி பெயர்ப்பு உதவியாளர் சேவைக்கு சேர்க்கப்பட்டு பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 35 உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் பணத்திலிருந்து ரூபா 16,549,744 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்களில் 23 பேர் 2023 மே மாதம் வரையிலும் திணைக்கள பணத்தில் சம்பளம் செலுத்தி ஏனைய நிறுவனங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | அந்த உத்தியோகத்தர்கள் அந்த அலுவலகங்களில் மொழி பெயர்ப்பு நடவடிக்கைகளையும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப ஏனைய கடமைகளையும் நிறைவேற்றுவதாகவும், இவ்வாறே நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு இணைந்ததாக இருந்தமையால் உள்ளீர்ப்பு செய்வதற்கு குறித்துரைத்த உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | தேவையின் பிரகாரம் அந்தந்த நிறுவனங்களில் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |